# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 63/2020 | Date : 02.04.2024 | DW2 |
|---|---|---|
| Name: அப்துல் கபார் | S/o.முகமது இப்ராஹிம் | |
| Evidence Recorded Time: 12.03 P.M. to 12.20 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பூர்வீகம் சென்னப்பம்பட்டி யூனியன் கிராமம் ஆகும். தற்போது குடியிருப்பது அம்மாபேட்டை. பூர்வீக அசையா சொத்துக்கள் உள்ளதா என்றால் கொஞ்சமாக உள்ளது அது எங்கு உள்ளது என்றால் சென்னப்பம்பட்டி கிராமத்தில் உள்ளது. தற்போது அம்மாப்பேட்டையில் எவ்வளவு ஆண்டுகளாக குடியிருக்கிறேன் என்றால் 10 ஆண்டுகள் குடியிருக்கிறேன். அம்மாப்பேட்டையில் ஆவண எழுத்தாளராக இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் அதற்கு உரிமம் இல்லை. ஆவண எழுத்தாரரிடம் உதவியாளராக இருக்கிறேன். இந்த வாதியுடைய தந்தையின் பெயர் ஷாஜி சோட்டா என்று சொல்லியுள்ளேன். ஆனால், அவர் பெயர் காஜி சோட்டா என்றால் சரிதான். அவருடைய சித்தப்பா எத்தனை ஆண்டுகாலமாக தெரியும் என்றால் சுமார் 50 ஆண்டுகளாக தெரியும். இந்த வாதிகளும் அவருடைய சகோதரிகள் மூவரும் அவர்கள் அம்மாபேட்டை வந்த பிறகு தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சாட்சி தற்போது அவர்களுக்கு சிறு வயதில் இருந்து தெரியும். வாதியின் தகப்பனாரும் அவருடைய சித்தாப்பாவும் 11.06.1993 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் மத்தியஸ்தாரக இருந்தேன் என்று சொல்லியுள்ளேன் அதில் நான் சாட்சி கையெழுத்தும் போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் தேதியானது 08.06.2010 ல் ஏற்பட்டுள்ளது என்றால் அதற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. தங்களுடைய சாட்சிய பிரமானபத்திரிகையில் சமுக சேவை செய்வேன் என்று சொல்லியுள்ளேன். எதனால் அதுபோல் சொல்லியுள்ளேன். அது என்னுடைய தகுதியை சொல்லியுள்ளேன். அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிஅல்ல. இதில் 4ம் பிரதிவாதி கே.எஸ் செல்வராஜை வாதிக்கு 2018 க்கு பிறகு தான் தெரியும் என்றால் சரிஅல்ல. அதே மாதிரி 1ம் பிரதிவாதியும் வழக்கு விசாரணைக்கு வந்த பிறகு தான் தெரியும் என்றால் சரிஅல்ல. சிறுவயதில் இருந்தே தெரியும். இந்த பிரதிவாதிகளுடைய சகோதரிகள் தாவாச்சொத்தை உங்களிடம் விற்றுத்தர வேண்டும் என்று கேட்டதாக சொல்லியுள்ளேன். தேதி மாதம் வருடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 11.01.2019 இந்த சகிலாவை பிரதிவாதியாக சேர்த்து இந்த வழக்கு 2,3 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.18/2019 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிஅல்ல.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–DW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.